REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 14௳ திங்கள் (27—5—57) ★ வெளியூர்: வைகாசி 15௳ செவ்வாய் (28—5—57) இதழ் [298

'சம்பளத்தைக் குறைத்துக்கொள்கிறேன்'

புதுடில்லி, மே 26—

குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், அவர்கள் தனது மாதச் சம்பளத்தில் ரூ. 1000 குறைத்துக்கொள்வதாக சர்க்காருக்கு எழுதியிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

குடியரசுத் தலைவருக்கு மாதம் ரூ. 10,000 சம்பளமாகத் தரப்படுகிறது. ஏற்கனவே இராசேந்திரர் அவர்கள் ரூ. 6,000 தான் சம்பளம் வாங்கி வருவதாகவும், இதில், ரூ. 1,000 குறைத்துக்கொள்வதாகவும் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

'சிக்கனம் தேவை' என்ற குரலுக்கு குடியரசுத் தலைவர் தரும் மதிப்பு என்று இந்த அறிவிப்பை சர்க்கார் போற்றி மகிழ்கின்றனராம்!

புது வரி விதிப்புக் கண்டன நாள்:

தலைநகரில் தி. மு. கழகத்தின் போர் முழக்கம்

பல்லாயிரம் மக்கள் திரண்டுவந்த மாபெரும் ஊர்வலங்கள்

டில்லிப் பேரரசுக்கு சென்னை மக்கள் தந்த எச்சரிக்கை

(நமது தனி நிருபர்)

சென்னை, மே 27—

டில்லி ஏகாதிபத்தியத்தின் புதிய வரி விதிப்புத் திட்டங்கள் குறித்து மக்கள் கொண்டுள்ள கருத்துக்கள் நேற்று எழுப்பிய திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் கண்டன முழக்கங்களில் பிரதிபலித்தது.

தங்களது உள்ளக் குமுறலை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் விரவாலிபர்கள் தலை நகரின் தெருவெல்லாம் நேற்று மாலை ஒலி பரப்பியதை, பல்லாயிரம் மக்கள் மனமார வாழ்த்தி வரவேற்றனர்.

புதிய வரி விதிப்புகளுக்கு மக்கள் காட்டவேண்டிய எதிர்ப்பு எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்பதற்கு வடிவம் காணுவதற்காக, நேற்று தி. மு. கழகத்தவர் நாடெங்கிலுமாக புது வரி எதிர்ப்பு நாள் கொண்டாடியுள்ளனர்.

தலைநகரில் கழகத்தவர் நடத்திய இரு மாபெரும் ஊர்வலங்களும், மகத்தானதோர் பொதுக்கூட்டமும், புது வரி விதிப்புத் திட்டங்கள் பற்றிய மக்களின் உள்ளக் குமுறலை உலகுக்குப் பறை சாற்றுவனவாக இருந்தன.

பல்லாயிரக் கணக்கான மக்கள், தங்களுக்காகக் குரல் கொடுக்கவும் வாதாடவும், போராடவுமாக ஒரு இயக்கம் தென்னாட்டில் இருக்கிறது. அதுதான்—தி. மு. கழகம் தங்களின் நம்பிக்கை மிகுந்த என்ற எண்ணத்திற்கு நேற்று மேலும் மெருகேற்றிக் கொண்டனர்.

'ஏழை—எளிய, நடுத்தர மக்களை வாட்டி வதைக்கும் புதிய வரி விதிப்பு உத்தேசங்களைக் கைவிடு' 'நிதிமந்திரியே இராஜினாமா செய்,' வரிவிதிப்புப் பிரச்சினையில் பொதுத் தேர்தல் நடத்து'— என்ற முழக்கங்கள், நேற்று தலைநகரை உலுக்கியிருக்கின்றன. கூட்டத்தில் கண்டனத் தீர்மானம், போர் முழக்கம் என்ற முன்னெச்சரிக்கையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விபரங்களைக் கீழே காண்க :—

புதிய வரிகளைக் கண்டித்து, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அவர்களின் அறிக்கைக்கிணங்க இன்று (26—5—57) சென்னையில் இரண்டு மாபெரும் ஊர்வலங்களும், கொத்தவால்சாவடியில் 11-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில் சிறப்பான ஓர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

பிற்பகல் 3 மணியளவில் சென்னை 'அறிவக'த்திலிருந்து முதற் பிரிவு ஊர்வலமொன்று புறப்பட்டு, கல்மண்டபம் ரோடு, ஜாண்ரபிள்ளையார் கோயில் தெரு, திருவொற்றியூர் ஐரோடு, பழைய ஜெயில் ரோடு, பிராட்வே ஆகிய வழிகளில் சென்று கொத்தவால் சாவடியை மாலை 6-15 மணி அளவில் அடைந்தது.

இரண்டாவது பிரிவு ஊர்வலம் —சிந்தாதிரிப்பேட்டை மேப்பியர் பார்க்கிலிருந்து புறப்பட்டு, சாமிநாய்க்கன் தெரு, ஜெனரல் ஆஸ்பத்திரி ரோடு, வால்டாக்ஸ் ரோடு, அண்ணுபிள்ளை தெரு ஆகிய வழிகளில் சென்று மாலை 6-30 மணியளவில் கொத்தவால்சாவடியை வந்தடைந்தது.

ஊர்வலத்தில், சென்னையில் உள்ள கிளைக் கழகத் தோழர்களும், சார்பு மன்றங்களின் தோழர்களும், தி. மு. கழக ஆதரவாளர்களும் பெருவாரியாகக் கலந்துகொண்டு, இடைவிடாது,

தேயிலை வரியைக் கூட்டாதே!
காப்பி வரியை உயர்த்தாதே!
தீப்பெட்டி வரியைக்
கூட்டாதே!
சர்க்கரை வரியை
உயர்த்தாதே!
கார்டு வரியைக் கூட்டாதே!
புகையிலை வரியை
உயர்த்தாதே!
புதிய வரிகளை வாபஸ் வாங்கு!
சிமெண்டு வரியை
உயர்த்தாதே!
இரயில் கட்டணத்தைக்
கூட்டாதே!
உணவுப் பொருள் விலையைக்
குறை!
அரிசி விலை ஏற்றத்தைத்
தடை செய்!
நிதி மந்திரியே
ராஜினாமா செய்!
புது வரிகள்மீது
பொதுத் தேர்தல் வை!

என்பன போன்ற ஒலி முழக்கங்களை விண்ணதிர முழக்கிக் கொண்டு சென்றார்கள்.

ஊர்வலம் வரும்போது எல்லா இடங்களிலும் பொதுமக்கள்—ஆண்களும் பெண்களுமாக பாதை ஓரங்களில் நின்று ஊர்வலத்தின் ஒலி முழக்கங்களைக் கேட்டு, வரிக் கொடுமைகளை உணர்ந்தார்கள்.

மாலை 6-30 மணிக்கு கொத்தவால்சாவடி ஆச்சாரப்பன் தெருவில் பொதுக்கூட்டம் தொடங்கியது. பொதுக்கூட்டத்தில் ஊர்வலத்திலிருந்து கலந்துகொண்ட மக்களும், ஏற்கெனவே கலந்துகொண்ட பொதுமக்களுமாக பல்லாயிரக்கணக்கில் குழுமியிருந்தனர்.

இம்மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு தோழர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். அவர் தனது தலைமையுரையில் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக் காட்டினார்.

அடுத்துப் பேசிய தோழர் இரகுநாதன் அவர்கள், மக்களுக்கு பெரும் பெரும் வரிகளைப் போடும் நடுத்தியப் பேரரசு, எவ்வளவு ஊழல்கள் மலிந்துள்ள அரசாக இருக்கிறது என்பதை விளக்கி, இப்பொழுது போட்டிருக்கும் வரி

(4-ம் பக்கம் பார்க்க)

★ கண்டனமும் வற்புறுத்தலும்

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன :—

1. வாழ்க்கைத் தரத்தில் மிகவும் தாழ்ந்துள்ள ஏழை - பாட்டாளி-நடுத்தர மக்களின் மீது - ஏற்கெனவே தாள முடியாத வரிகளை சுமந்துள்ள மக்களின்மீது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால் மேலும் புதுவரிகளை விதித்துள்ள மத்திய அரசியலாரை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. ஐந்தாண்டுத் திட்டங்களில் பலனடைந்துள்ள பகுதி மக்களுக்கு 'சேஸ்' வரி விதித்து, திட்டங்களை நிறைவேற்றுவதை விட்டு, தேய்ந்துள்ள தென்னகத்து மக்களை பாதிக்கின்ற வரிகளை 'வாபஸ்' வாங்க வேண்டுமென்று மத்திய அரசியலாரை இப்பொதுக் கூட்டம் வற்புறுத்துகின்றது.

தாளமுத்து கொலை எதிரொலி:

தூத்துக்குடி கம்யூனிஸ்டுத் தலைவர் ஐசக், மற்றும் இருவர் கைது

கொலைகாரர்களை கண்டுபிடிப்பதில் போலீஸ் தீவிரம்

தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர்—தொழிற் சங்கத் தலைவர் தோழர் தாளமுத்து அவர்கள் படுகொலை செய்யப்பட்டதின் எதிரொலியாக பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கொலை சம்பந்தமாக, உள்ளூர் பிரபல கம்யூனிஸ்டுத் தலைவரும், 1951-ம் ஆண்டுத் தேர்தலில் தோழர் கே. வி. கே. சாமிக்கு எதிராக, பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டவரும், தாளமுத்து அவர்கள் எந்த ஆலைத் தொழிலாளர்களுக்குத் தலைவராயிருந்தாரோ அந்த ஆலையில் போட்டிச் சங்கம் வைத்து நடத்திவருபவருமான ஐசக் என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

நகரில் நடைபெற்ற கொலைச் சம்பவங்களுக்குப் பிறகு இ.பி.கோ. 151-வது பிரிவின்படி கைது செய்யப்பட்ட தி. மு. கழகச் செயலாளர் ஜோசப் மட்டுமே ஜாமீனில் வெளியே விடப்பட்டிருக்கிறார் என்றும், கைது செய்யப்பட்ட வேறு எவருக்கும் ஜாமீன் தரப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

தோழர் ஜோசப், போலீசார் விதித்தபடி, செங்கற்பட்டு போய்ச் சேர்ந்திருக்கிறார்.

தாளமுத்துவைக் கொலை செய்தவர்களுள் ஒருவர் எனக் கருதப்படும் இருவர், போலீசாரால் கைது செய்யப்பட்டு விட்டனர் என்றும் தெரிகிறது.

மாவட்ட, மற்றும் வட்ட போலீஸ் அதிகாரிகள், நடைபெற்ற இரு கொலைகள் சம்பந்தமாக நகரில் தங்கியிருந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர் என்றும், தாளமுத்து கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டு தலைவர் ஐசக், மற்றும், கம்யூனிஸ்டுகள் என்று சொல்லப்படும் செல்லையா நாடார், ஆதிராசன் என்ற ராஜபாண்டியன் ஆகியோரும் வட்டார நீதிபதி முன்னிலையில் கொண்டு செல்லப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

புது வரிகளுக்கு நகரசபை கண்டனம்

சல்கத்தா, மே 25—

"புதுவரிகள் ஏற்கனவே வாழ்க்கை செலவு உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகளையும் மத்தியதர வகுப்பினரையும் அதிகம் பாதிக்கும்" என்று ஆழ்ந்த கவலை தெரிவித்து கல்கத்தா நகரசபை ஏகமனதாக ஓர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மத்திய வரிகளை எதிர்த்துப்போராட்டம்

ஆர். எஸ். பி. நடத்தும்

எர்ணுகுளம், மே 26—

மத்திய அரசாங்க நிதி அமைச்சர் கொண்டு வந்துள்ள புதியவரிகளின் விளைவாக ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையைப் பற்றி ஆர். எஸ். பி. ஊழியர்களும் அனுதாபிகளும் கூடி விவாதித்துள்ளனர்.

வரிகளுக்கு எதிராக மக்கள் கருத்தை வெளிப்படுத்தும் வகையில் கிளர்ச்சிகளைத் தூண்டியும், நடத்துவது பற்றியும் தீவிர ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் சோஷலிஸ்டுகள் போராட்டம்

பம்பாய், மே 26—

மத்திய அரசாங்கம் விதித்துள்ள புதிய வரிகளை எதிர்த்து பம்பாய் மாநில மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியினர் வரும் ஜூன் 9-ந் தேதியன்று போராட்டம் நடத்துவரெனத் தெரிய வருகிறது.

முதலைக் கண்ணீர் வடிக்கிறார்!

புதுடில்லி, மே 26—

"வரிப் பணத்தின் மூலம், அதிகம் தேவைப்படும் பிரிவினர் வாழும் பகுதிகளுக்குச் செலவிடப்படும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட வேண்டும். பொது வாழ்வை சிக்கனமாகவும், எளிய முறையிலும் நடத்த அரசாங்கம் உதவிபுரிய வேண்டும்.

"அரசாங்கமே அதன் சொந்தச் செலவுகளை நியாயமானது என்று கருத முடியாத நிலையில், அதிகப்படியான வரியை மக்களிடையே எதிர்பார்ப்பது தவறாகும்.

"டில்லியில் காணப்படும் வாழ்க்கை, வரவேற்புகள், விருந்துகள், பெரும் அளவுக்கு அவசியமற்றவையாகும். அதிகாரிகளுக்கு வழங்கப்படும்-படிச் செலவுகளையும் மற்றவைகளையும் பெரும் அளவிற்குக் குறைக்கலாம்."

இவ்வாறு, அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன், 'எகனமிக் ரெவ்யூ' என்ற பத்திரிகையில் புதிய வரிகளைக் கண்டித்து எழுதுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27—5—57 திங்கள்

தட்டிக்கழிக்கும் தந்திரம்!

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வேகமாகப் பாய்ந்தோடிவரும் தண்ணீரைக் கட்டுப்படுத்தி, நிலக்கரியை வெட்டியெடுப்பது சாத்தியந்தான் என்பது உறுதிபட்டுவிட்டது. அதற்கானத் துவக்கப் பணியையும் இந்தியப் பிரதமர் செய்து முடித்துவிட்டார்.

முதல் தவணையாக வெட்டியெடுக்கப் படுகின்ற பழுப்பு நிலக்கரியிலிருந்து, 3,80,000 - டன் சுத்தக் கரிக்கட்டிகளும், 43,000 டன் கரித் தூள்களும், 6,400 டன் மோட்டார் ஸ்பிரிட்டும், 51,300 டன் தாரும், 1032 டன் பிறபிலும் கிடைக்கக்கூடும் என்று முடிவு கட்டப்பட்டிருக்கின்றது. இம்முடிவைக்கொண்டு, காலப் போக்கில் மேற்படி பொருட்களின் உற்பத்தி பெருகக்கூடும் என நாம் முடிவு கட்டலாம்.

நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் முதல் கட்டத்தில் இரண்டு இலட்சம் கிலோவாட் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்கான, மின்சார உற்பத்திச் சாலை ஒன்று நிர்மாணிக்கப்படும் என்பது நிச்சயம். அதன் பின்னர், செயற்கை உரத் தொழிற்சாலை இடம் பெறுவதும் எதிர்பார்க்கக்கூடியதே. அதற்குப் பிறகு ஒன்றன்பின் ஒன்றாக மேற்குறிப்பிட்ட மற்ற பொருட்களை ஆக்குவதற்குரிய, தனித் தனித் தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படுவது இந்தியப் பேரரசின் தாராளப்போக்கையும், சென்னை ஆட்சியினரின் பொறுப்புணர்ச்சியையும் நெஞ்சுரத்தையும் பொறுத்திருப்பதாகும்.

பழுப்பு நிலக்கரியிலிருந்து தார் எடுக்கலாம், மோட்டார் ஸ்பிரிட் தயாரிக்கலாம், பினையில் உருவாக்கலாம் என்பதெல்லாம், பழுப்பு நிலக்கரியில் கலந்திருக்கும் மூலப் பொருட்களின் பட்டியலேயாகும். அப்பட்டியலை ஏட்டில் எழுதி, படித்துப் பார்த்தால் மகிழ்ச்சியளிக்கும். ஆனால் ஏட்டு விளக்கம் மட்டுமே, தென்னக மக்களின் வாழ்க்கையில் வளத்தைக் கூட்டிவிடப் போவது கிடையாது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரியை எது எதற்குப் பயன்படுத்த வேண்டும் என இந்தியப் பேரரசு கருதிக்கொண்டு இருக்கின்றதோ, அதை விளக்கிக் காட்டும் வகையில், சுரங்கத் திட்ட அலுவலகத்தில் ஒரு படம் வைக்கப்பட்டிருக்கின்றது. அப்படத்தில், பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்திச் செயல்பட இருக்கும் துறைகள் பலவும் ஓவிய உருவில் காட்டப்பட்டுள்ளன. மின்சார உற்பத்தி நிலையம், புகைவண்டி, பஸ், ஆலை, கப்பல், அடுப்பு ஆகிய சித்திரங்கள் திட்டப்பட்டுள்ளன.

மேற்படி ஓவியங்களில், சேலம் உருக்குத் தொழிற்சாலையைச் சுட்டிக்காட்டும் சித்திரம் வரையப்படவே இல்லை. இது சிந்திக்கத்தக்கது—நுணுகி நுணுகி ஆராய்ந்து முடிவு கட்டத்தக்கது.

புகைவண்டி, கப்பல், அடுப்பு, பஸ் முதலிய சித்திரங்களைத் தீட்டிக்காட்ட முன்வந்த இந்தியப் பேரரசு, உருக்குத் தொழிற்சாலையைத் தீட்டிக்காட்டத் தவறி இருக்கின்றது. இந்தத் தவறு எப்படியோ ஏற்பட்டுவிட்டது எனச் சமாதானம் கூறுகின்றவர் எவரும் இருக்கமுடியாது.

வேண்டுமென்றே உருக்குத் தொழிற்சாலைக்குரிய ஓவியத்தை இருட்டடிப்பு செய்திருக்கின்றது இந்தியப் பேரரசு என்பதே மறுக்கமுடியாத உண்மையாகும்.

தமிழகத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவேண்டும் என்பதும், அதிலும் இரும்புக் கனிப் பொருளை ஏராளமாகக் கொண்டிருக்கும் சேலம் பகுதியில் அவ்வுருக்குத் தொழிற்சாலையை நிறுவவேண்டும் என்பதும், தமிழ் மக்களின் ஒருமனதானகோரிக்கையாகும். இக்கோரிக்கையின் முன்னோடியாக நமது முன்னேற்றக் கழகம் இருந்தபோதிலும்கூட, இக்கோரிக்கையை அரசியல் கட்சிகள் அனைத்தும் வற்புறுத்தி வருகின்றன.

இக்கோரிக்கை எழுந்தபோதெல்லாம், நெய்வேலி சுரங்கத் திட்டத்தின் வெற்றியைச் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது இந்தியப் பேரரசு. அதாவது, நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக்கொண்டுதான் சேலத்து கனிப்பொருளை உருக்குவதற்கான உருக்குத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க முடியும் என்று, திட்டவட்டமாக இன்றைய நிதி அமைச்சரான டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்கூட அன்று வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

எனவே, நெய்வேலி சுரங்கத்திலிருந்து பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பது நூற்றுக்கு நூறு சாத்தியந்தான் என்று ஏற்பட்டுவிட்ட பிறகு, தான் வாக்குறுதி அளித்துள்ளதே போல், சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்று துவங்குவதற்கும் இந்தியப் பேரரசு திர்மானித்திருக்கும் என்பதைத் தமிழ்மக்கள் எதிர்பார்ப்பர். அவ்வாறு எதிர்பார்ப்பதுதான் நியாயமுமாகும்.

ஆனால் இந்தியப் பேரரசோ, நெய்வேலியில் வெட்டியெடுக்கப்போகும் பழுப்பு நிலக்கரியை புகை வண்டிக்கும், கப்பலுக்கும், அடுப்புக்கும் பயன்படுத்த வேண்டும் என முடிவு கட்டி இருக்கிறதே அல்லாது, உருக்குத் தொழிற்சாலைக்கும் பயன்படுத்தவேண்டும் என முடிவு கட்டி இருக்கவில்லை. இந்தியப் பேரரசின் இம்முடிவைத்தான், நெய்வேலிச் சுரங்கத் திட்ட அலுவலகத்தில் இருக்கும் பழுப்பு நிலக்கரி பயன் விளக்க ஓவியம், நமக்குத் தெளிவாக விளக்கிக்காட்டுகிறது.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதில் இந்தியப் பேரரசிற்குத் துளியும் விருப்பம் கிடையாது.

நெய்வேலித் திட்ட வெற்றியைச் சுட்டிக்காட்டி வந்ததெல்லாம், தமிழ் மக்களின் உருக்குத் தொழிற்சாலை கோரிக்கையைத் தட்டிக்கழிக்க, இந்தியப் பேரரசு கையாண்டுவந்தத் தந்திரமே என்பதை தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

செல்வாக்குக் குறைவதேன்?

காங்கிரஸ் ஊழியர்கள் கண்டுபிடிப்பு

பம்பாய், மே 24—

காங்கிரசின் செல்வாக்கு குறைந்துவருவதற்கான காரணத்தைக் கண்டுபிடித்துள்ளனர் காங்கிரஸ் ஊழியர்கள்!

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளும், அதிகாரிகளின் ஒத்துழையாமையும்தான் காங்கிரஸ் செல்வாக்கு குறைந்து வருவதற்குக் காரணம் என்று அகில இந்தியக் காங்கிரசின் பொதுச் செயலாளரிடம் பம்பாய் மாநிலக் காங்கிரஸ் ஊழியர்கள் முறையிட்டுள்ளனர்.

பணவசதியில்லையாம்!

எனவே, இடநெருக்கடி தீர வழியில்லையாம்!

புதுடில்லி, மே 25—

தற்சமயம் அரசாங்கத்திடம் உள்ள பண வசதியைக் கொண்டு நோக்குமிடத்து இரண்டாவது திட்ட காலத்தில் இரயில்களில் ஏற்படும் இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு வழியில்லை என்று இரயில்வே அமைச்சர் ஜெகஜீவன் ராம் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் குடியிருப்பு வசதித் திட்டம்

தமிழகத்திற்கு டில்லிப் பேரரசு வழங்கும் கடனும் மானியமும்

புதுடில்லி, மே 25—

தொழிலாளருக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தைப் பற்றிய விவரங்களை மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

நாட்டின் எல்லா மாநிலங்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் 1,176 வீடுகள் கட்ட 1957 மார்ச்சில் மொத்தம் ரூ. 47,91,184 கடனாகவும் மானியமாகவும் தரப்பட்டுள்ளதாம்.

சென்னை மாநிலத்தில் 50 வீடுகள் கட்ட ரூ. 62,625 கடனாகவும், ரூ. 41,750 மானியமாகவும் மதுரை மீனாட்சி ஆலைக்கு தரப்பட்டுள்ளதாம்.

இந்தியாவிலுள்ள மசூதிகள்

மத்திய சர்க்கார் நிலை?

"இந்தியாவிலுள்ள மசூதிகளின் பராமரிப்புக்காக மத்திய சர்க்கார் எதுவும் செலவிடுவதில்லை; பஞ்சாப், இராஜஸ்தான், பெப்சு சர்க்கார்கள், அந்த மாநிலங்களிலுள்ள மசூதிகளுக்காக ரூ. 33,600 செலவிட்டுள்ளதாகத் தெரிகிறது. மேற்கு வங்கத்தில் 1950-ம் ஆண்டில் நடைபெற்ற கலவரத்தினால் சேதமடைந்த மசூதிகளைப் பழுது பார்ப்பதற்காக அம்மாநில சர்க்கார ரூ. 26,655 அனுமதித்திருப்பதார் அறிவிக்கப்பட்டிருக்கிறது" என்று, மக்கள்சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து சிமெண்டு இறக்குமதி?

நாடு முழுமையிலும் பற்றுக்குறை

புதுடில்லி, மே 25—

சிமெண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மற்றும் சிறு அளவில் வெளிநாடுகளிலிருந்து சிமெண்டு இறக்குமதி செய்வதற்கும் சர்க்கார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றும், நாடு முழுமையிலும் சிமெண்டு பற்றுக்குறையாக இருந்துவருகிறதென்றும் மத்திய தொழிலியல் மந்திரி, மக்கள்சபையில் கூறியுள்ளார்.

அரசியல் கட்சிகளுக்கு நிறுவனங்கள் நிதி வழங்குவது முறையா?

மக்கள் சபையில் கேள்வி---பதில்

புதுடில்லி, மே 25—

தனிப்பட்ட கம்பெனிகள், நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவதுபற்றி மக்கள் சபையில் கேள்வி எழுந்திருக்கிறது.

இதுபற்றி குறிப்பிடுகையில் நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி, 'பெரிய நிறுவனங்கள் மட்டுமின்றி சில இயக்கங்களும், தொழிலாளர்களும், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவது பற்றியும் நாம் யோசித்தாக வேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

"கல்கத்தாவில் உள்ள 'இந்தியன் இரும்பு - உருக்கு கம்பெனி' யார், தாங்கள் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கவும், அதற்கொப்ப சங்க அறிக்கையைத் திருத்திக்கொள்ளவும் அனுமதி வேண்டுமெனக் கோரி செய்துகொண்ட மனுவின்மீது, கல்கத்தா உயர்நீதி மன்றம் தந்த தீர்ப்பை நிதிமந்திரி அறிவாரா?" என்று கேட்கப்பட்டது.

பதிலளித்த கிருஷ்ணமாச்சாரி 'சங்க அறிக்கை'க்கு உட்பட்டிருந்தால் நிறுவனங்கள், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கலாம் என்று கூறியதுடன், 'குறிப்பிட்ட வழக்கில் நீதிமன்றம் கூறியதெல்லாம், அதுபோல அரசியல் கட்சிகளுக்குத் தரப்படும் நிதி பற்றி கம்பெனியின் கணக்குகளில், இன்னகட்சிக்கு இவ்வளவு தரப்பட்டது என்று தெளிவாக குறிப்பிடல் வேண்டும் என்பது தான்; இதுபோல, வெளியிட வேண்டியது சட்டப்படி அவசியந்தானா என்பது குறித்துத்தான் நாம் பரிசிலித்தாக வேண்டும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

டாங்கேயின் கேள்வி பெற்ற பதில்

"இந்த இந்தியன் இரும்பு - உருக்கு கம்பெனிக்கு சர்க்கார் ரூ. 7 கோடி கடன் தந்தது உண்மைதானா? அப்படிக் கடன் கொடுக்கப்பட்டது உற்பத்தியைப் பெருக்கவா அல்லது, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் நிதிக்கு பணம் தரவா?" என்று, கம்யூனிஸ்டு தலைவர் டாங்கே கேள்வி ஒன்று கேட்டிருக்கிறார்.

இதற்குப் பதிலளித்த நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி கூறியதாவது :—

"எனது நண்பர் டாங்கே, இந்தச் சபைக்குப் புதியவர்; அவருக்கு அனுபவம் இருந்திருந்தால் இதுபோல இந்த விஷயம் பற்றி பரிசீலிக்காமல் கேள்வி கேட்டிருக்கமாட்டார்.

"இந்தக் கம்பெனிக்குச் சர்க்கார் ரூ. 9 கோடிவரை கடன் வழங்கியிருக்கிறார்கள்; ஆனால், கடன்தரப்பட்டது 1952 நவம்பர் திங்களில்; எனவே, இந்தக் கம்பெனி, எதாவது அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவதற்கும், இந்தக் கடன் தரப்பட்டதற்கும் எவ்வித தொடர்புமில்லை."

"கல்கத்தா உயர் நீதிமன்றம் இந்த விஷயம் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்களை ஒட்டி, இந்த விவகாரத்தை தேர்தல் கமிஷனின் பரிசீலனைக்கு சர்க்கார் அனுப்புமா?" என்று, ஹிரேன் முகர்ஜி என்ற கம்யூனிஸ்டு கேட்டபோது, கிருஷ்ணமாச்சாரி கூறிய பதிலாவது :—

"பெரிய பணக்காரர்கள் மட்டுமின்றி வேறு பலரும் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவது பற்றி, நாம் பரிசீலித்தாக வேண்டும்.

"தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளிடமிருந்து பெறும் போனஸ் சில அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்கும் பயன்படுகின்றன (இந்தச் சமயத்தில் சில கம்யூனிஸ்டுகளும், வேறு சில எதிர்க்கட்சியினரும், 'காங்கிரஸ் கட்சியின் சங்கதி என்ன' என்று கேட்டிருக்கின்றனர்); இந்த விவகாரம் குறித்தெல்லாம் நாம் பரிசிலித்தாக வேண்டும்."

தென்பகுதி இரயில்வேயில் 20,000 பாலங்கள்!

சென்னை, மே 25—

தென்பகுதி இரயில்வேயில் மொத்தம் 20,000 பாலங்கள் உள்ளன என்றும், எல்லா பாலங்களும் உறுதியாக நல்ல நிலைமையில் உள்ளன என்றும் இரயில்வே அதிகாரி தெரிவித்துள்ளார்.

சென்னை நகரசபைக்குச் சர்க்கார் கைவிரிப்பு

சென்னை, மே 25—

1957—58-ம் ஆண்டிற்குச் சில பொது சுகாதாரத்திட்டங்களுக்கு சென்னை நகரசபை ரூ. 7½ இலட்சம் கடன் கோரியிருந்தது; இந்தக் கோரிக்கையை ஒத்தி வைத்திருப்பதாக சென்னை சர்க்கார் அறிவித்திருக்கிறதாம்.

பயிர் இன வளர்ச்சிக்கு அணுசக்தி!

புதுடில்லி, மே 25—

இந்தியாவில் பயிர் இன வளர்ச்சிக்கு அணு சக்தி பயன்படுத்தப்படுமென்று உணவு அமைச்சர் ஜெயின் தெரிவித்துள்ளார்.

பம்பாயில் உள்ள இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் 'கோபால்ட்' அணுக் கதிரியக்க வயல்கள் ஏற்படுமாம்.

நீர்வாயுகுண்டினைவிட வல்லமையுள்ள 'குண்டு'

மாஸ்கோ, மே 24—

"முதலாளித்துவ நாடுகளை நாங்கள் குண்டுகளால் தாக்கி அழித்து ஒழிக்க விரும்பவில்லை; ஆனால், ரஷ்யா, சில விவசாயப் பொருள்களின் நபர் விகித உற்பத்தியில் அமெரிக்காவை இன்னும் ஐந்து ஆண்டுகளில் மிஞ்சிவிடும். இந்த வெற்றி, நீர்வாயுக்குண்டினை விட பலனுள்ளதாக இருக்கும்"

என்று, ரஷ்யக் கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ், கூறியதாக செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

பிராவிடண்ட் நிதி வசதி

மாதம் ரூ. 500 ஊதியம் பெறுபவர்களுக்கும் கிடைக்கும்

சென்னை, மே 24—

தொழிற்சாலைகளில் பணியாற்றுபவரில் மாதம் ரூ. 300 வரை ஊதியம் பெறுபவர்களுக்கு பிராவிடண்ட் நிதி வசதி அளிக்கப்பட்டிருந்தது; இனி மாதம் ரூ. 500 வரை ஊதியம் பெறுபவர்களுக்கும் இவ்வசதி கிடைக்கும்படி விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

சீன இராணுவத்தில் ஆட்குறைப்பு

விவசாயம், தொழில் துறையில் ஈடுபடுத்தப்படுவர்

சீனாவின் பொருளாதார நிலை கவலைக்கிடமாக இருப்பதின் காரணமாக, தற்போதைய நிலையில் நிறையப் பணம் செலவு செய்து பெரிய இராணுவத்தைப் பாதுகாத்துவர வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இராணுவ பலத்தைக்குறைத்து புனரமைப்பு செய்ய முற்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து குறைக்கப்படுபவர்களின் சேவையை விவசாய, தொழில் உற்பத்திக்குத் திருப்புவதென சீன அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கழகச் செய்திகள்

பொன்மலைப்பட்டி:
29—4—57 இரவு 7 மணிக்கு, கழகப் பணிமனையில், தோழர் சி. எஸ். மணி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுவில், அன்பில்-தருமலிங்கம் அன்னையார் மறைவுக்கு வருந்தியும், பணிமனைப் பொறுப்பாளராக தோழர் நாகராசனை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குன்னூர்:
31—3—57ல் நடைபெற்ற தி. மு. கழக செயற்குழுக் கூட்டத்தில், தோழர் மா. இராமன் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பெருங்குளம்:
1—5—57-ல், இவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் கழக நிதி திரட்டுவதற்கு, மாறுவேடமிட்டு தோழர் செல்வராசேந்திரன் தலைமையில் சென்று, நெய், அரிசி முதலியவையோடு பணமும் திரட்டினர்கள்.

திருக்கழுக்குன்றம்—நால்வர்பேட்டை:
1—5—57 காலை தி.மு. கழகத் துவக்க விழா தோழர் ச. கதிர்வேலர் தலைமையில் நடைபெற்றது; தோழர் தி. ஆ. சண்முகம் கழகப் பணிமனையைத் திறந்து வைத்தும், தோழர் வேலு அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்தும் சொற்பொழிவாற்றினர்.

களரம்பட்டி:
1—5—57-ல், களரம்பட்டி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் அரு. ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் இரா. சோமசுந்தரம் செயலாளராகவும், கே. எஸ். வேலுசாமி துணைச் செயலாளராகவும், போ. துரைசாமி பொருளாளராகவும், சி. துரைசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குடிகாடு(?)ற்றம்:
1—5—57-ல் நடைபெற்ற குடியேற்றம் தி. மு. கழக செயற்குழுக் கூட்டத்தில் ஓர் முக்கியத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆதனூர்:
1—5—57ல், ஆதனூர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் து. சின்னுசாமி தலைமையில் நடைபெற்றபோது; தோழர்கள் து. சின்னுசாமி செயலாளராகவும், க. பெரியசாமி துணைச்செயலாளராகவும், பீ. சுலைமான் பொருளாளராகவும், நா. பொன்னுசாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கீரனூர்:
2—5—57ல், கீரனூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் அ. சுலைமான் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் மு. இராமநாதன், ஜெகந்நாதன் ஆகியோர் பேசினர்.

அம்மன்புரம்:
2—5—57ல், அம்மன்புரம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், பொதுக் கூட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

திண்டிவனம்:
3—5—57ல், தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் எஸ். பூபால் தலைமையில் நடைபெற்றபோது, கழகச் செயலாளரின் துணைவியார் மறைவுக்கு வருந்தியும், தேர்தல் நிதி கொடுப்பது பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருமனூர்:
3—5—57ல், திருமனூர் தி.மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் கா. அ. பழனி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் அ. பொன்னுசாமி செயலாளராகவும், இரா. அரங்கசாமி துணைச் செயலாளராகவும், பெ. சுப்பிரமணியம் பொருளாளராகவும், ந. அண்ணாமலை மாவட்டப் பிரதிநிதியாகவும், 7 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அரிமழம்:
3-5-57ல், அரிமழம் (திருச்சி) தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் முருகன் தலைமையில் நடைபெற்றபோது, மு. வைத்தியப்பன் செயலாளராகவும், மு. இயலரசு துணைச்செயலாளராகவும், இராம. குஞ்சான் பொருளாளராகவும், மு. மதிவாணன் மாவட்டப் பிரதிநிதியாகவும், 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பம்பாய்—கம்பாலாஹில்:
7—5—57 இரவு 10-30 மணி அளவில் ஆறி அலி திடலில் தோழர் சு. நவயுவன் தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது வரவு-செலவு கணக்குகள் வாசித்துக்காட்டப்பட்டபின், தோழர்கள் அண்ணாமலை, அன்பழகன் ஆகியோரின் ஆய்வுரைக்குப் பின், சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வடவழி:
5—5—57 மாலை 6 மணிக்கு தோழர் மா. துரைசாமி தலைமையில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தை திறந்துவைத்து, கொடியேற்றி சிறப்புரையாற்றினர். வடவழி தி. மு. கழகச் சார்பில் பொதுச்செயலாளர் அவர்களின் தேர்தல் வழக்கு நிதியாக ரூ. 10 அளிக்கப்பட்டது. சிரசாயக்கன் பாளையம் வ. உ. சி. படிப்பகத்தின் சார்பில் பொதுச்செயலாளருக்கு கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டது.

நெத்திமேடு (சேலம்):
5—5—57ல், சேலம் நெத்திமேட்டில் தி. மு. கழகக் கிளை துவக்க விழா தோழர் எஸ். முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. அறிவழகன், ஈ. ஆர். கிருட்டிணன், மா. கி. தசரதன், சிற்றரசி ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் தி. மு. கழகம் நாட்டுக்கு செய்யும் பணியைப் பற்றியும், கொள்கையை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

சேலம்:
5—5—57 மாலை கிச்சிப்பாளையம் அருந்ததியர் மாரியம்மன் கோவிலுக்கருகில் தோழர் ஏ. மாரியப்பன் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் தசரதன், க. அறிவழகன், இ. ஆர். கிருட்டிணன் ஆகியோர் பேசினர்.

நெத்திமேட்டிலும் 27-வது வட்டத்திலும், கிச்சிப்பாளையத்தில் 25-வது வட்டத்திலும் புதிய தி. மு. கழக கிளைகளை தோழர் க. அறிவழகன் அவர்கள் துவக்கி வைத்தார்.

வேலூர்—தோட்டப்பாளையம்
4—5—57 இரவு 8 மணிக்கு, வேலூர்-தோட்டப்பாளையத்தில், தி. மு. கழக 6-வது ஆண்டுவிழாவும், மே தின விழாவும் தோழர் மா. பா. சாரதி எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது; அதுபோது பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மே தின விழா குறித்தும், தொழிலாளர் உயர்வு குறித்தும் சிறந்த முறையில் சொற்பொழிவாற்றினர்.

மங்கலக்குடி:
5—5—57 மாலை 3 மணிக்கு, உறுப்பினர் கூட்டம் தோழர் மு. அயூப்அகன் தலைமையில் நடைபெற்றபோது, விரைவில் கழகத்தின் திறப்பு விழாப் பொதுக்கூட்டம் நடத்துவது பற்றியும், கழகத்திற்கு சொந்தத்தில் கட்டடம் கட்டுவது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

சிக்கில்நாய்க்கன்பேட்டை
5—5—57ல் தி. மு. கழகச் செயற்குழு தோழர் ம. கோ. மணி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் ஏ. அந்தோணி செயலாளராகவும், எஸ். மாரிமுத்து - துணைச்செயலாளராகவும் யா. முகமது இஸ்மாயில் பொருளாளராகவும், மு. ஜமால் முகமது மாவட்டப் பிரதிநிதியாகவும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஏரல் (நெல்லை மாவட்டம்)
5—5—57ல், இவ்வூர் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, முன்னாள் செயலாளர் பொறுப்பிலிருந்து நீங்கிவிட்டதால், தோழர் எஸ். பி. முத்து புதிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சேவூர் (ஆரணி வ. ஆ.)
9—5—57 இரவு 8 மணிக்கு, தோழர் வி. இ. செயராமன் தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கோவில்பட்டி:
5—5—57ல் இவ்வூர் கழக செயற்குழுக் கூட்டம் தோழர் அ. சு. சி. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றபோது, பொதுக்கூட்டமொன்று நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

நாகப்பட்டினம்:
5—5—57-ல், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களை நகரின் பல முக்கிய வீதிகளுக்கு அழைத்துச் சென்று கழகக் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன. அண்ணா படிப்பகம் கே. வி. கே. சாமி படிப்பகம் ஆகியவற்றை பார்வையிட்டார்.

அண்ணா படிப்பகத்தின் முன்னிலையில் தோழர் எம். இராசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சிற்றரசு அவர்கள் பேசினர்.

பின்னர் மேலக்கோட்டைவாயிலிலுள்ள அழகிரி மன்ற ஆண்டு விழாவில், கலந்து கொண்டார். தோழர்கள் எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் தோழர் ஏ. எஸ். பாண்டியன் பேசிமுடித்ததும், தோழர் சிற்றரசு அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

தோழர் சிற்றரசு அவர்களுக்கு பல மன்றங்கள் தி. மு. கழகம், துறைமுகத் தொழிலாளர்கள், கைவண்டித் தொழிலாளர்கள் 'மலர் வணிகர் சங்கம்' ஆகியவற்றின் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

வட்டத்தூர்:
3—5—57ல், மேற்படியூர் தி. மு. கழகத் நிர்வாகிகள் தேர்வு, தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையிலும், தோழர் பொன்-சொக்கலிங்கம் முன்னிலையிலும் நடைபெற்றது; தோழர்கள் சி. நாராயணசாமி செயலாளராகவும், து. சுப்பிரமணியன் துணைச் செயலாளராகவும், செ. இராமலிங்கம் பொருளாளராகவும், அ. சாமியப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும், 11 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராயநல்லூர்
4—5—57ல், இராயநல்லூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, பொதுக்கூட்டமொன்று நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்கள் சேர்த்தல்

5-வது வகுப்பு முதல் எஸ். எஸ். எல். சி; வரை படிக்க வசதியில்லாத ஆதி திராவிட மாணவர்களும்—பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களும், மதுராந்தகம் வட்ட-அச்சரப்பாக்கம் மாணவர் விடுதியில் சேர்ந்து, உயர்நிலைப் பள்ளியில் படிக்கலாம்.

விடுதியில் சேர விரும்பும் மாணவர்கள் 30—5—57-க்குள், மாணவர் தன்னுடைய வயது, படித்துள்ள படிப்பு, எந்த வகுப்பில் சேரவேண்டும் என்ற விவரங்களோடு, 'இ. எம். செகதாம்பாள், நிர்வாகி; மாணவர் விடுதி, அச்சரப்பாக்கம், மதுராந்தகம் வட்டம் என்ற முகவரிக்கு மனு செய்து கொள்ளலாம்; பதிலுக்கு (13 புதிய காசுகள்) அஞ்சல்தலையும் அனுப்ப வேண்டும்.

★

" சென்னை—கொருக்குப்பேட்டை, 18, காக்ரேன் பேசின் ரோடிலுள்ள 'இராவ்சாகிப் வி. தர்மலிங்கம் பிள்ளை நினைவு மாணவர் விடுதி"யில் ஏழை தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், ஏழை பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் வசதியளித்து கல்வியறிவு தரப்படுகிறது.

இவ்வாண்டு கோடை விடுமுறைக்குப்பின், 15—6—57-ல் திறக்கப்படவிருக்கும் மேற்கண்ட விடுதியில் சேரவிரும்பும் மாணவர்கள், 30—5—57-க்குள் மேற்படி விடுதி காப்பாளருக்கு தங்களின் முகவரியோடு கூடிய அஞ்சல் உரை ஒன்று வைத்து மனுசெய்து கொள்ளவேண்டும்.

குரங்குகள் மூலம்
ரூ. 73 இலட்சம் வருமானம்

புதுடில்லி, மே 24—

1955—56 ஆண்டில் மொத்தம் 1,16,296 குரங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனவாம்.

1956—57-ம் ஆண்டில் மொத்தம் 1,56,893 குரங்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனவாம்.

இதன் மூலம் மொத்தம் ரூ. 73 இலட்சம் இந்திய அரசாங்கத்திற்கு வருமானம் கிடைத்துள்ளதாம்.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, டென்மார்க்கு, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் குரங்குகளை முக்கியமாக இறக்குமதி செய்த நாடுகளாகும்.

நாள்தோறும் 5,400டன் நிலக்கரி செலவாகிறதாம்!

சென்னை, மே 23—

தென் பகுதி இரயில்வேயில் நாள் ஒன்றுக்கு 5,400 டன் நிலக்கரி செலவாகிறது என்றும், மாதம் 1,62,000 டன் நிலக்கரி பல்வேறு மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படுகிறது என்றும் இரயில்வே பொது நிர்வாகி தெரிவித்துள்ளார்.

ஐந்தாண்டு திட்டத்திற்கு பிரெஞ்சு உதவி

பாரிஸ், மே 23—

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பிரெஞ்சு பங்கு கொள்வது பற்றி இரு நாடுகளுக்கிடையே கொள்கையளவில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறதாம்.

கதிரியக்கத்தினுல் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க முயற்சி

புதிய மருந்து கண்டுபிடிப்பு

ஆஸ்லோ, மே 25—

கந்தகம் மூலத்திலிருந்து 'ஸிஸ்டமின்' என்னும் புதிய மாத்திரை ஒன்றை நார்வே நாட்டு விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனராம்.

கதிரியக்கத்தினுல் மனிதர்களின் உடலில் ஏற்படும் விளைவுகளை சுமார் பாதி அளவுக்கு இந்த மருந்து குறைத்துவிடுமாம்.

சமுதாய நலத் திட்டம்

தமிழ்நாட்டில் 4,300 கிராமங்களில் அமுல் நடத்தப்படுமாம்

புதுடில்லி, மே 22—

1957—58-ம் ஆண்டில் மொத்தம் 481·0 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 75,312 கிராமங்களில் சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சென்னை மாநிலத்தில் 4,300 கிராமங்களிலும், ஆந்திரத்தில் 6,500 கிராமங்களிலும், மைசூரில் 3,500 கிராமங்களிலும், கேரளத்தில் 2,000 கிராமங்களிலும் சமூக நலத் திட்டங்கள் அமுல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கேரள அமைச்சர்கள்

இல்லறம் புகுவதற்கு முடிவு

திருவனந்தபுரம், மே 25—

கேரள மாநிலத்தின் தொழிலாளர் அமைச்சர் டி. வி. தாமஸ் ரெவின்யூ அமைச்சர் கே. ஆர். கௌரி ஆகிய இருவரும் வாழ்க்கைத் துணைவர்களாக இல்லறம் புக முடிவு செய்துள்ளனர்.

மண விழாவினை உணவு அமைச்சர் ஜார்ஜ் வரும் 30-ந் தேதி யன்று நடத்திவைப்பார் என்றும், கேரள கம்யூனிஸ்டு கட்சி இந்த திருமணத்திற்கு அனுமதி அளித்துள்ளது என்றும் தெரிய வருகிறது.

ரூ. 10,67,00,000 செலவில் 100 டீசல் இயந்திரங்கள்

இந்தியா ஆர்டர் தந்துள்ளதாம்

புதுடில்லி, மே 23—

நியூயார்க்கைச் சேர்ந்த கிறுவன மொன்றிடம் இந்தியா 100 டீசல் இயந்திரங்களுக்கு ஆர்டர் தந்துள்ளதாம். இதற்கு மொத்தம் ரூ. 10,67,00,000 செலவு செய்யப்படுமாம். ஆர்டர் தருவதற்கு முன் எல்லா பிரபல கம்பெனிகளையும் விசாரிக்கப்பட்டதாம்.

இனவெறியின் இறுமாப்பு!

கேப்டவுன்; மே 25—

தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதே அரசாங்கத்தின் இறுதி நோக்கமென்றும், இன வேற்றுமையை முடிந்த வரையில் தீவிரமாக அமுல் நடத்துவது தற்போதைய நோக்கமென்றும் சட்டசபையில் உள்நாட்டிலாகா அமைச்சர் கூறியுள்ளார்.

கேட்டீரா, சேதி!

சென்னை, மே 23—

1956-ம் ஆண்டில் தென்பகுதி இரயில்வேயில் மொத்தம் 8,43,938 பேர் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்ய முயன்றனர் என்றும், 8,88,129 பேர் உடனே டிக்கெட் கட்டணத்தைச் செலுத்தி விட்டனர் என்றும், 31,291 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது என்றும், 9,543 பேருக்கு நீதி மன்றத்தில் அபராதம் விதிக்கப்பட்டது என்றும் 14,547 பேர் சிறைத் தண்டனை ஏற்றுள்ளனர் என்றும், 1,849 பேர் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர் என்றும், டிக்கெட் கட்டணமாகவும், தொகையாகவும் மொத்தம் 17 இலட்சம் ரூபாயும், அபராதமாக ரூ. 8000-மும் வசூலிக்கப்பட்டுள்ளன என்றும் தென்பகுதி இரயில்வே அதிகாரி ஜோசப் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரப் புள்ளி

சென்னை, மே 25—

சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைத்தரப் புள்ளி, 1957 மே 11-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில் 370 ஆக இருந்தது; இது முந்திய வாரப் புள்ளியிலிருந்து ஒரு புள்ளி அதிகம். ராகி, காய்கறி, இறைச்சி இவற்றின் விலையேற்றமே இதற்குக் காரணம்.

நாகர் கிளர்ச்சியை ஒடுக்க மலபார் போலீஸ் பட்டாளம்

இராணுவத்திற்கு உதவுவதற்காக அசாம் புறப்பாடு

திருச்சி, மே 25—

நாகர்களின் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு, டெல்லியின் இராணுவ பலம் போதவில்லையாம்!

அதற்காக, இங்குள்ள மலபார் ஸ்பெஷல் போலீஸ் பட்டாளத்தின் துணையை நாடியுள்ளது டெல்லி சர்க்கார்!

மலபார் போலீஸ் பட்டாளம் ஒன்று விசேஷ இரயில்மூலம் நேற்று இங்கிருந்து அசாம் செல்வதற்காக சென்னை புறப்பட்டிருக்கிறது.

மற்றுமொரு பட்டாளமும், மதுக்கரையிலிருந்து புறப்படுகிறதாம், அசாம் நோக்கி!

பெயர்போன இந்த மலபார் போலீஸ் பட்டாளத்தை, டெல்லி சர்க்கார் தங்களின் நேரடி நிர்வாகத்தில் வைத்துக்கொள்ள உத்தேசமாம்!

தலைநகரில்...!

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

களில் பெரும்பாலும் தென்னாட்டின் மீது தங்களின் ஆதிக்கத்தைக் காட்டவே போடப்பட்டுள்ளதென்றும், இதற்கு தி. மு. கழகம் அனுமதிக்கப்போவதில்லையென்றும் விளக்கினார்.

அடுத்து தோழர் வே. நீ. அரசு சிறிது நேரம் பேசினார்.

அடுத்து தோழர் கருணாகரன் அவர்கள், (தெலுங்கில்) புது வரிகளைக் கண்டித்து, அதன் கொடுமையை விளக்கிச் சிறிது நேரம் பேசினார்.

பின்னர் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் அவர்கள், வரிக் கொடுமையைப் பற்றியும், அதனை விமர்சனம் செய்யும் காமராசர்களை பற்றியும் விளக்கி, சனநாயகம் என்ற பெயரால் சர்வாதிகாரம் செய்துவருகிறார்கள் வட இந்திய ஏகாதிபத்திய எண்ணம் கொண்ட இன்றைய ஆட்சியாளர் என்றும், அவர்களுக்கு, 'இந்தக் கூட்டம் கண்டனக் கூட்டம்' என்று நாம் கூறுவதைவிட, 'எச்சரிக்கைவிடும் கூட்டம்,' என்று கூறலாம் என்று கூறி, வரிக் கொடுமையை ஒழிக்கும்வரை தி. மு. கழகம் ஓய்வடையாது என்று விளக்கினார்.

அடுத்து, தோழர் க. அறிவழகன் அவர்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் வடநாட்டின் முன்னேற்றத்திற்காக, இந்தியப் பேரரசு மக்கள்மீது தாங்கமுடியாத வரிச் சுமையை சுமத்தியிருப்பதையும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை தேர்ந்தெடுத்த மைலாப்பூரும் - மாம்பலமும் இப்பொழுதாவது வரிக்கொடுமையை உணரும் என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து 11-வது வட்ட தி. மு. கழகத் தோழர் செயராமன் அவர்களால் புதுவரிகளைக் கண்டித்தும், அவ்வரிகளை திரும்பப் பெற வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தியும், இரண்டு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு, கூடியிருந்த மக்களின் பெருத்த கையொலி ஆரவாரத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்து தோழர் இரா. செழியன் அவர்கள் இந்தியப் பேரரசு விதித்திருக்கும் வரிகளை புள்ளி விவரங்களால் விளக்கி, கிருஷ்ணமாச்சாரியாரை தேர்ந்தெடுத்த மக்கள், இன்று அதே கிருஷ்ணமாச்சாரியை வெறுத்தொதுக்கும் அளவுக்கு வரிக்கொடுமை உள்ளதென்பதையும் விளக்கினார்.

இறுதியாக, (போலீஸ் அனுமதி காலம் குறுகியிருந்ததால்) தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள், 'ஈரிக்கு நாட்டாண்மை கொடுத்தால், கிடைக்கு இரண்டாடு கேட்கும்' என்பதைப் போல், டி. டி. கிருஷ்ணமாச்சாரியை அனுப்பியதால் அவர் இப்பொழுது வரிகளாக போடுகிறார் என்றும், ஈரியின் நாட்டாண்மையை ஒழிப்பது எவ்வளவு முக்கியமோ - அவசியமோ அதைப் போன்று இந்தக் கொடிய வரியைச் சுமத்துகின்றவர்களையும் பதவியை விட்டு விலக்கச் செய்வதும் முக்கியமாகும் என்று உணர்த்தினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் செயராமன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

1956—57-ம் ஆண்டில் 4,261-மனுக்கள் நஷ்டஈடு கோரி வந்துள்ளனவென்றும், இதற்காக மொத்தம் ரூ. 26,68,336 நஷ்டஈடாக இரயில்வே தந்துள்ளது என்றும் தகவல் கிடைத்துள்ளது.

இந்தியாவிலுள்ள எண்ணெய் கம்பெனிகள்

வெளிநாடுகளுக்கு அனுப்பிய பணத்தின் விவரங்கள்

புதுடில்லி, மே 25—

இந்தியாவிலுள்ள எண்ணெய்க் கம்பெனிகளும், எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களும் 1955, 1956-ம் ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ள பண விவரங்கள் வருமாறு :—

பர்மா ஷெல் :	ரூ. 33·78 கோடி
	ரூ. 32·58 ,,
எஸ்.வி.ஓ.சி. :	ரூ. 9·58 ,,
	ரூ. 10·74 ,,
கால்டெக்ஸ் :	ரூ. 8·06 ,,
	ரூ. 5·72 ,,
ஸ்டான்வாக் ரிபைனரி :	ரூ. 7·47 ,,
	ரூ. 9· 4 ,,
அசாம் ஆயில் கம்பெனி	ரூ. 4·94 லட்சம்
	ரூ. 55 ,,

1955, 1956-ம் ஆண்டுகளுக்கு பங்குகள் அல்லது இலாபத் தொகை அனுப்பப்பட்டதின் விவரங்கள் :—

எஸ்.வி.ஓ.சி. :	ரூ. 1·53 கோடி
	ரூ. 71 லட்சம்
கால்டெக்ஸ் :	ரூ. 1·29 கோடி
	ரூ. 15 லட்சம்

இந்தத் தகவல்களை மக்கள் சபையில் மத்திய அமைச்சர் மாளவியா வெளியிட்டுள்ளார்.

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின் காரணத்தை அறிய — திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிரோட்டம் உலகு அறிய

'HOMELAND'

ஆங்கில வார இதழ் [ஆசிரியர் : அண்ணா

2--6--57 முதல் ஞாயிறுதோறும்

வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1×4 அளவில்
8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்

தனி இதழ் 2 அணா — ஆண்டு சந்தா ரூ 7.

விவரங்கட்கு : நிர்வாகி, 'ஹோம்லண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு : காஞ்சிபுரம்

****

சென்னையில்

புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டம்

29-5-57 புதன் மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்களும், மற்றும் பலரும் கலந்துகொள்வர்

—திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகக் கிளைகள்

****

கேரள சர்க்கார் முடிவுக்கு டெல்லி இணக்கம்!

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கம்யூனிஸ்டு காப்பாற்றப்பட்டார்

புதுடில்லி, மே 25—

காங்கிரஸ்காரர் ஒருவரைப் படுகொலை செய்ததற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வாசு பிள்ளை என்ற கம்யூனிஸ்டின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனையாக அதனைக் குறைத்து கேரள சர்க்கார் உத்தரவிட்டதும், அது குறித்து மத்திய உள்நாட்டு மந்திரி எதிர்ப்புத் தெரிவித்ததும் நினைவிலிருக்கலாம்.

இந்த விவகாரத்தில் டெல்லி சர்க்கார் இப்போது, கேரள சர்க்காரின் முடிவுக்கு இணங்கிவிட்டதாகத் தெரிய வருகிறது.

ஒன்று சேர்ந்து வசூலிக்கும் திட்டம்

இந்தியப் பேரரசு உருவாக்கி வருகிறதாம்

பம்பாய், மே 24—

மாநில அரசாங்கங்களின் கருத்தையறிந்து சில பண்டங்களுக்கு விற்பனை வரியை, சுங்க வரியுடன் சேர்த்து வசூலிக்கும் ஒரு திட்டத்தை இந்தியப் பேரரசு உருவாக்கி வருகிறதாம்.

துணி, புகையிலை ஆகியவை மீது ஒரே வரியாக வசூலிக்க அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

இந்தியா—திபேத் வர்த்தகம்

1956—57-ம் ஆண்டில், மொத்தம் ரூ. 3,17,60,000 மதிப்புள்ள பொருள்கள் இந்தியாவிலிருந்து திபேத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்றும், இதே காலத்தில் திபேத்திலிருந்து மொத்தம் ரூ. 72,94,000 மதிப்புள்ள பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன என்றும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

அடிமை சாசனம்

புதுடில்லி, மே 26—

சில முக்கியமான விஷயங்களில் மத்திய அரசாங்கம் தனது நிலையை வரையறுத்துக் கூற வேண்டும் என்றும், மாநில அரசைப் பற்றிய விஷயம் என்று டில்லி தட்டிக் கழிக்கக் கூடாது என்றும் காங்கிரஸ் தலைவர் தேபர் கருத்துரை ஆற்றியுள்ளார்.

கழகக் கூட்டங்கள்

★

கல்லிடைக்குறிச்சி :
மணிமுத்தாறில்
29—5—57 அன்று
பேசுபவர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.

★

மகாதேவி (முசிறி வட்டம்) :
திருவள்ளுவர் திடலில்
29—5—57 இரவு 8 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் : சி. இராமதாசு
பேசுவோர் :
அண்ணா
மு. பெ. முத்துக்கருப்பன்

★

பள்ளப்பட்டி :
29—5—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : பழனிச்சாமி
பேசுவோர் :
என். வி. நடராசன்
எஸ். முத்து
முகதா

★

கட்டக்குடி :
(மன்னார்குடி வட்டம்)
சாவடிக்கு அருகில்
29—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் : இர. கணேசன்
கொடியேற்றுபவர் :
ப. நாராயணசாமி
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
இன்னிசை : சுந்தரேசன்

★

கதிராமங்கலம் :
கடைத் தெருவில்
29-5-57 மாலை 5-30 மணிக்கு
தலைவர் : ஆர். கே. மூர்த்தி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
என். கிட்டப்பா
பொ. தருமன்
கோ. சி. மணி
சிறுமி இளங்கோ

★

திருப்பத்தூர் :
பாலத்திற்கருகில்,
28—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
சிவபுண்ணியம்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
ப. நாராயணசாமி
வ. மோகன்

கம்யூனிஸ்டு முறையை காங்கிரஸ் பின்பற்றும்

கேரளத்தில் முழுநேர கம்யூனிஸ்டு ஊழியர்கள் ஆற்றிவரும் தொண்டினைக் கண்டு, காங்கிரசும் அம்முறையைப் பின்பற்ற முனைந்துள்ளது.

மக்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள முழுநேர ஊழியர் பிரிவு ஒன்றை பம்பாய் காங்கிரஸ் கமிட்டி ஏற்படுத்த முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த ஊழியருக்கு மாதம் ரூ. 150 ஊதியம் தரப்படுமாம். மொத்தம் 150 ஊழியர்கள் அமர்த்தப்படுவார்களாம்.

தமிழ்நாடு கிராம ஊழியர்கள் வெற்றி!

சென்னை, மே 25—

தமிழ் நாடு கிராம ஊழியர்களின் நிர்வாகக் குழுக் கூட்டம் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

கிராம ஊழியர்களின் பிரதிநிதிகள் அமைச்சரைக் கண்டு பேசியதில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

வரும் வரவு-செலவுத் திட்டத்தில் சென்னை அரசாங்கம் கிராம ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தருவது பற்றிய முடிவை அறிவிக்கக்கூடும் என்றும் தெரியவருகிறது.

தேசியகத்தில் முதியோர் கல்வி நிலையங்கள்

புதுடில்லி, மே 25—

தேசிய விஸ்தரிப்பு வட்டாரங்களில் முதியோர் கல்வி நிலையங்களை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவாம்.

1956 டிசம்பர் மாதம்வரை பல்வேறு மாநிலங்களில் இது போன்று 8,350 நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றில் 58 நிலையங்கள் சென்னை மாநிலத்திலும், 2 நிலையங்கள் புதுவையிலும், 690 நிலையங்கள் ஆந்திராவிலும், 426 நிலையங்கள் மைசூரிலும், 84 நிலையங்கள் கேரளத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திருமணம்

29—5—57 காலை 9 மணிக்கு திண்டுக்கல் தோழர் மா. தங்கவேலர்—தோழியர் கமலம் அம்மையார்; தோழர் கே. செயராமன்—தோழியர் வேலு அம்மையார் ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா, திண்டுக்கல் சோலை ஹாலில் நடைபெறும்; விழாவிற்கு அண்ணா அவர்கள் தலைமை வகிப்பார்; அதுபோது துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் மா. கி. நாராதன், மதுரை எஸ். முத்து, பி. சமதர்மம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பொ. தருமன் நிகழ்ச்சிகள்

மே 29: மாலை 3 மணிக்கு அணைக்கரை விவசாய ஆலோசனைக் குழு கூட்டம். மாலை 6 மணி: கதிரா மங்கலம்; 30: காரைக்குறிச்சி (திருச்சி மாவட்டம்); 31: பந்தநல்லூர்; (திருமணம்); ஜூன் 5: மதகுசாலை (திருமணம்); 6: நாசிங்கன்பேட்டை; 7: வாணதிரையன் குப்பம்; 9: வடுமாங்குடி.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.